01.09.2017

## அணைகளில் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் காவிரி நீர் பிடிப்பு பகுதியில் :, தீவிரம் அடைந்த பருவ மழையால் , கர்நாடகாவின் கபினி , கே.எஸ்.ஆர்., அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது .

கர்நாடகாவின் காவிரி நீர் பிடிப்பு பகுதி மற்றும் கேரளாவிலுள்ள கபினிநீர் பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது.

நேற்று, கே.எஸ்.ஆர்., அணை நீர்வரத்து வினாடிக்கு , 24 ஆயிரம் கன அடியாகவும் , கபினி நீர்வரத்து, 10 ஆயிரம் கனஅடியாகவும் அதிகரித்தது.எஸ்.ஆர்.கே .,சில் இருந்து வினாடிக்கு, 10 ஆயிரம் கன அடி , கபினியில் இருந்து , 3,000 கன அடி நீர் காவிரியில் திறக்கப்பட்டது.

நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம் , 58.40 அடியாகவும், நீர் இருப்பு , 23.50 டி.சி.எம்.,யாகவும் இருந்தது வினாடிக்கு ., 6,809 கனஅடி நீர் வந்தது கர்நாடகா . அணைகளில், 13 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளதால் , வரும் நாட்களில் மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிக்கும்.

## தமிழகத்தில் 5 நாள்களுக்கு மழை

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் அநேக இடங்களில் செப். 1-ஆம் தேதி முதல் செப். 5-ஆம் தேதி வரை மிதமான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலசந்திரன் கூறியது: செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரையுள்ள காலகட்டத்தில் ஈரப்பதத்துடன் கூடிய கிழக்கு திசை காற்று , தமிழக வளிமண்டலத்தில் வீச வாய்ப்பு உள்ளது.

இதனால், தமிழகத்தின் அநேக இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். தென் , வட தமிழக மாவட்டங்களின் உள் பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். சென்னையைப் பொருத்தவரை புறநகர்ப் பகுதிகளில் மாலை அல்லது இரவு

நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். ஜூன் 1-ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 31-ஆம் தேதி வரை காலகட்டத்தில் , தென் மேற்கு பருவமழை 250 மிமீ மழை பதிவாகியுள்ளது. இது இயல்பை விட 23 சதவீதம் அதிகம். மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த சில நாள்களாக மழை பெய்தது. இந்த நிலையில் , மேற்கு திசை காற்றில் ஏற்பட்ட வேக மாறுபாடு மற்றும் வெப்பச் சலனம் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் பல இடங்களில் மழை பெய்துள்ளது. இந்த மழை சில இடங்களில் வியாழக்கிழமையும் தொடர்ந்தது.
**செஞ்சியில் 90 மி.மீ. மழை...** தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை காலை நிலவரப்படி, விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் 90 மி.மீ. மழை பதிவானது. திருச்சி மாவட்டம் சமயபுரம் மற்றும் வேலூர் மாவட்டம் கலவையில் 80 மி.மீ., திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் , காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் , உத்தரமேரூர், மைலத்தில் தலா 70 மி.மீ. காவேரிப்பாக்கம் , திருக்காட்டுப்பள்ளி, திருவள்ளூரில் 60 மி.மீ., ஆம்பூர், தேவாலா, லால்குடி, போளூரில் தலா 50 மி.மீ., வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் , பூண்டி, திண்டிவனம், பொன்னேரி, வானூர், பூவிருந்தவல்லியில் தலா 40 மி.மீ. பதிவானது.

## திருவள்ளூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையின் திட்டங்கள்



திருவள்ளூர்: தமிழக அரசின் வேளாண்மைத்துறை , வேளாண் பொறியியல் துறை , தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை , பொதுப்பணித் துறை ஆகிய துறைகளின் கீழ் , விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் முத்துதுரை கூறியதாவது: அரசின் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு இல்லாததால் , பெரும்பாலான விவசாயிகள் , அரசிடமிருந்து தங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என குறை கூறுகின்றனர். விவசாயிகள் தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்கள் குறித்து அறிந்து பயன்பெற வேண்டும். ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம்: இத்திட்டத்தின் கீழ் , ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேருக்கு மிகாமல் காய்கறி விதைகள் 40 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

## தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

(உயர் தொழில்நுட்ப உற்பத்தி பெருக்குத் திட்டம்): முக்கனி (மா , பலா, வாழை) பயிர்களின் பரப்பினை அதிகரிக்கும் வகையில் பழப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு மானியத்தில் செடிகள் மற்றும் இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன.

மா (ஒரு ஹெக்டேர்) ரூ. 7,650 மதிப்பிலும், கொய்யா ரூ. 9,900 மதிப்பிலும், பப்பாளி ரூ.22,500 மதிப்பிலும் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. காய்கறி பயிர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 மானியத்தில் காய்கறி விதைகள் மற்றும் இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. மிளகாய் சாகுபடிக்காக அதற்கான விதைகள் , இடுபொருள்கள் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 12,000 மானியம் வழங்கப்படுகிறது. மலர் சாகுபடியை அதிகரிக்க, மல்லிகை பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 16,000 மானியத்தில் செடிகள் வழங்கப்படுகின்றன. தோட்டக்கலை பயிர்கள் சாகுபடிக்கு நிழல் வலைக்குடில் அமைப்பதற்கு ரூ.355- (ஒரு சதுர மீட்டருக்கு) மற்றும் பசுமைக்குடில் அமைப்பதற்கு ரூ. 467.50 (ஒரு சதுர மீட்டருக்கு) மானியம் வழங்கப்படுகிறது. காய்கறித் தளைகள் வழங்கும் திட்டம்: வீட்டில் காய்கறி தோட்டம் அமைப்பதற்காக மானியத்தில் தளைகள் வழங்கப்படுகிறது.

பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்: தொகுப்பு முறையில் ஒரு குழுவுக்கு 50 விவசாயிகள் வீதம் தேர்வு செய்து , இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு பயிற்சி மற்றும் இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

**பிரதம மந்திரியின் விவசாயத்துக்கான நீர்பாசனத் திட்டம்:** தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைப்பதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75

சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது.
இதுபோன்று ஏராளமான திட்டங்கள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படுகின்றன. இதுகுறித்து மேலும் விவரங்களைப் பெற திருவள்ளூர் உழவர் சந்தை வளாகத்தில் உள்ள அலுவலகத்தையும், கீழ்க்காணும் அந்தந்த பகுதிக்கான தோட்டக்கலைத் துறை அலுவலர்களின் செல்லிடப்பேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| ஆர்.கே.பேட்டை | 8870739991 |
| பள்ளிப்பட்டு | 9442943312 |
| திருத்தணி | 9790171116 |
| திருவாலங்காடு | 9566272112 |
| ஈக்காடு | 9843643170 |
| எல்லாபுரம் | 8825748432 |
| சோழவரம் | 9600009853 |
| கடம்பத்தூர் | 9444227095 |
| பூந்தமல்லி | 9787504272 |
| அம்பத்தூர் | 9176691999 |
| பூண்டி | 9843643170 |
| புழல் | 9566272112 |
| கும்மிடிப்பூண்டி | 9787504272 |
| மீஞ்சூர் | 9600009853 |

## லாபம் தரும்: சாமந்திப்பூ சாகுபடி



அரக்கோணம்: புரட்டாசி , கார்த்திகை, தை மாதங்களில் சாமந்தி பூவுக்கு தட்டுப்பாடு அதிகரிக்கும். எனவே சாமந்திப் பூவை தற்போது சாகுபடி செய்தால் அந்த கால கட்டத்தில் அவை அறுவடைக்கு தயாராகி விடும்.

சாமந்திப் பூ ரகங்களை பொருத்தவரை கோ- 1, கோ-2 மற்றும் எம்.டி.யு- 1ஆகியன. கோ -1 மஞ்சள் நிறப் பூக்களைக் கொடுக்கும். கோ -2 கரும்பழுப்பு நிறத்தில் பூக்களைக் கொடுக்கும். எம்.டி.யு.- 2 மஞ்சள் நிறப் பூக்களைக் கொடுக்கும். பெரும்பாலும் பூக்கள் சாகுபடிக்கு வடிகால் வசதியுடன் மணல் கலந்த செம்மண் நிலம் ஏற்றதல்ல.

மண்ணின் கார அமிலத் தன்மை சுமார் 6.0 முதல் 7.0 வரை இருக்க வேண்டும். நீர்த் தேக்கமுள்ள வடிகால் வசதி குறைந்த , கனமாக களிமண் சார்ந்த மண் வகைகள் சாமந்தி பயிருக்கு ஏற்றவை. சாமந்தி ஒரு வெப்ப மற்றும் மிதவெப்ப மண்டலப் பயிராகும். இச் செடிகள் நீண்ட இரவு மற்றும் குறுகிய பகல் கொண்ட பருவங்களில் பூக்கும்.

இதற்கான சாகுபடி நிலம் தயாரித்தலின்போது நிலத்தை 2 அல்லது 3 முறை உழுது பண்படுத்திய பிறகு , கடைசி உழவின்போது ஹெக்டேருக்கு 25 டன் நன்கு மக்கிய தொழு உரம் இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும். நிலத்தை நன்கு சமன்படுத்திய பிறகு சுமார் ஒரு அடி இடைவெளியில் பார்கள் அமைக்கவேண்டும்.

நடவுப் பருவத்தின்போது கவனமாக செயல்பட வேண்டியது அவசியம்.

சேர் பிடித்த இளம் தளிர்களைப் பார்களின் ஒரு பக்கத்தில் வரிசையாக செடிக்குச் செடி 30 செ.மீ. இடைவெளி இருக்குமாறு நடவேண்டும். நடும்போது வேர்ப்பாகம் மடியாமல் நேராக மண்ணுக்குள் செல்லுமாறும் , வேர்ப்பாகம் முழுவதும் மறையும்படி நடுதல்வேண்டும்.

பருவம் தவறி நடும்போது செடிகளின் பூக்கும் திறன் மற்றும் மகசூல் பாதிப்பு ஏற்படும். நடும் முன் வேர்பிடித்த தளிர்களை , எமிசான் கரைசலில் (ஒரு கிராம் , ஒரு லிட்டர் தண்ணீர் கலந்த கலவை) முக்கி நடவேண்டும். ஒரு ஹெக்டேர் நடவு செய்ய 1,11,000 சாமந்தி செடிகள் தேவைப்படும்.

**உர மேலாண்மை:** அடியுரமாக ஹெக்டேருக்கு 25 டன் தொழு உரம் கடைசி உழவின்போது இடவேண்டும். பின்னர் செடி நடும் முன்னர் 60 கிலோ தழைச்சத்து , 120 கிலோ மணிச்சத்து , 25 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக் கூடிய ரசாயன உரங்களை, பார்களின் அடிப்பகுதியில் இட்டு , இலேசாகக் கிளறி மண்ணினுள் மூட வேண்டும்.

மேல் உரமாக 60 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரத்தை நட்ட 30 நாள்கள் கழித்து இடவேண்டும். மறுதாம்புப் பயிருக்கும் இதே அளவு உரம் இடவேண்டும். பூக்கள் அதிகம் பிடிக்க நட்ட 30, 45 மற்றும் 60-ஆவது நாள்களில் ஜிப்ரலிக் அமிலம் 50 பிபிஎம் கரைசலைத் தெளிக்க வேண்டும். நடுவதற்கு முன்னர் ஒரு தண்ணீர், நட்ட மூன்று நாள்களுக்குப் பின்னர் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் ஒரு வாரம் ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். தேவைப்படும்பொழுது களை எடுக்கவேண்டும். செடிகள் நட்ட ஆறு வாரங்களுக்குள் நுனிக்கிளையினை ஒடித்து பக்கக் கிளைகள் வளர ஊக்குவிக்க வேண்டும். சாமந்தியில் மறுதாம்புப் பயிர் என்பதும் முக்கியம். நவம்பர் மாதத்தில் நடவுப் பயிர் பூத்து ஓய்ந்துவிடும். அதன் பின்னர் டிசம்பர் மாதத்தில், செடிகளைத் தரைமட்டத்திலிருந்து வெட்டி விட்டு , களை எடுத்து , நடவுப் பயிருக்குப் பரிந்துரை செய்த அதே அளவு உரத்தினை இட்டு நீர் பாய்ச்சவேண்டும். இலைப்பேன், அசுவினி இலைப்புழு: இவைகள் இலைகளில் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். கட்டுப்படுத்த மானோகுரோட்டாபாஸ் 2 மில்லி மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். சாமந்தி பூச்செடிகளை தாக்கும் நோய்களாக வேளாண் விஞ்ஞானிகள் குறிக்கும் நோய்கள் பல உள்ளன.

**வேர் வாடல் நோய்** : செடிகள் திடீரென வாடி காய்ந்து விடும். தாக்கப்பட்ட செடிகளின் வேர்கள் அழுகி காணப்படும். கட்டுப்படுத்த காப்பர் அக்ஸி குளோரைடு 2.5 கிராம் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கரைத்து செடிகளைச் சுற்றி ஊற்றவேண்டும்.

**இலைப்புள்ளி நோய்** : தாக்கப்பட்ட இலைகளில் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் தோன்றி , இலைகள் வெளுத்துவிடும். இதனால் செடிகளின் வளர்ச்சிக் குன்றி மகசூல் இழப்பு ஏற்படும். கட்டுப்படுத்த மேன்கோசெப் 2 கிராம் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவேண்டும்.

சாமந்தி பூவுக்கு வயது எனும் போது நடவுப் பயிருக்கு 6-8 மாதங்கள், மறுதாம்புப் பயிருக்கு 4 மாதங்கள். நட்ட 3 மாதங்களில் சாமந்தி அறுவடைக்கு வரும் , பூக்களை சூரிய வெப்பத்துக்கு முன்னர் காலைவேளைகளில் பறிக்க வேண்டும். ஹெக்டேருக்கு நடவுப் பயிரில் 20 டன் மலர்கள் கிடைக்கும். மறுதாம்புப் பயிரில் 10 டன்கள் கிடைக்கும்.

## தமிழகம் புதுச்சேரியில் அநேக இடங்களில் மழை பெய்யும் வானிலை-மையம் அறிவிப்பு



5 நாட்களுக்கு அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும் சில இடங்களில் கனமழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்து உள்ளது.

சென்னை,

ஈரப்பதமிக்க காற்று காரணமாக தமிழகத்திலும் , புதுச்சேரியிலும் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் 5 நாட்களுக்கு அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும் சில இடங்களில் கனமழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்து உள்ளது.

ஈரப்பதமிக்க காற்று கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. ஈரப்பத காற்று காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் இன்று முதல் 5 நாட்களுக்கு அநேக இடங்களில் மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்து உள்ளது. இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் கூறியதாவது:- வங்கக்கடலில் இருந்து

ஈரப்பதமிக்க கிழக்கு திசை காற்று தமிழகத்தின் வளி மண்டலத்தின் மீது வீசத்தொடங்கி உள்ளது. இதன் காரணமாக அதிக பட்சமாக செஞ்சியில் 9 செ.மீ. மழை பெய்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக சமயபுரத்திலும் , கலவையிலும் தலா 8 செ.மீ. மழை பெய்து உள்ளது. தமிழகம்-புதுச்சேரியில் மழை 1-ந்தேதி முதல் 5-ந்தேதி வரை அதிக ஈரப்பதகாற்று வீச உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று (வெள்ளிக் கிழமை) முதல் 5 நாட்கள் வரை அநேக இடங்களில் மிதமான மழை பெய்யும். தென் மாவட்டங்களிலும் , வட மாவட்டங்களிலும் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. ஒரு சில இடங்களில் நாளை(சனிக்கிழமை) மிக கனத்த மழை பெய்யும். சென்னையில் இடியுடன் மழை சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் 1-ந்தேதி முதல் 5-ந்தேதி வரை இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இவ்வாறு அவர் கூறினார். நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:- மழை அளவு செஞ்சி 9 செ.மீ., சமயபுரம், கலவை தலா 8 செ.மீ., செங்கம், ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், காஞ்சீபுரம், மயிலம் தலா 7 செ.மீ., காவேரிப்பாக்கம், திருக்காட்டுப்பள்ளி, திருவள்ளூர் தலா 6 செ.மீ., ஆம்பூர், தேவலா, லால்குடி, போளூர் தலா 5 செ.மீ., விரிஞ்சிபுரம், பூண்டி, திண்டிவனம், பொன்னேரி, வானூர், பூந்தமல்லி தலா 4 செ.மீ., கோவிலங்குளம், கேளம்பாக்கம், மதுரை தெற்கு , செம்பரம்பாக்கம், கிராண்ட் அணைக்கட்டு, திருமானூர்,வாழப்பாடி, தாமரைப்பாக்கம், ஆர்.கே.பேட்டை தலா 3 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் 60 இடங்களிலும் மழை பதிவாகி உள்ளது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

## மேட்டூர் அணையில் இன்று மாலையுடன் தண்ணீர் திறப்பு நிறுத்தம்



சேலம் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் இன்று :மாலையுடன் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது குடிநீர் தேவைக்காகவும் ., நிலத்தடி நீர் ஆதாரத்தை அதிகரிக்கும் வகையிலும் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது கடந்த .15 நாட்களாக திறந்து விடப்பட்டுள்ள நிலையில் , இன்று மாலை 6 மணியுடன் தண்ணீர் நிறுத்தப்பட உள்ளது . கடந்த சில நாட்களாக பெய்த தொடர்மழையால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது தற்போது .7,538 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது மேட்டூர் அணையின் தற்போதைய நீர் இருப்பு . 24.035 டி கடந்த .சியாக உள்ளது.எம்.20 நாட்களில் மேட்டூர் அணையின் நீர் மட்டம் 59.1 அடியாக உயந்துள்ளது கால்வாயில் இன்னும் .3 மாதங்களுக்கு தண்ணீர் திறந்த விட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தென்பெண்ணை ஆற்றின் வழியாக வினாடிக்கு 462 கனஅடி நீர்வரத்து : சாத்தனூர் அணையின் நீர்மட்டம் உயர்வு



திருவண்ணாமலை சாத்தனூர் அணைக்கு வினாடிக்கு :462 கன அடி தண்ணீர் வருவதால், அணையின் நீர்மட்டம் உயரத் தொடங்கியிருக்கிறது திருவண்ணாமலை . அதன்படி . மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக பரவலான மழை பெய்து வருகிறது, நேற்று முன்தினம் இரவு மாவட்டத்தில் அதிகபட்சமாக செங்கத்தில் 75.40 மிமீ மழை பதிவானதுமேலும் ., போளூரில் 44.60 மிமீ, திருவண்ணாமலையில் 18மிமீ, சாத்தனூரில் 14.80 மிமீ, ஆரணியில் 12.20 மிமீ, வந்தவாசியில் 5.மிமீ செய்யாறில் 15.50 மிமீ மழை பதிவானது எனவே ., மாவட்டம் முழுவதும் உள்ள ஏரிகள் , குளங்கள் ஓரளவு நிரம்பியுள்ளன இன்னும் .சில நாட்கள் மழை நீடித்தால் பெரும்பாலான நீர்நிலைகள் முழு கொள்ளளவை எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது .

ஆனாலும், சாத்தனூர் அணை நீர்பிடிப்பு பகுதியில் போதுமான மழையில்லாத காரணத்தால், கடந்த ஒரு மாதமாக , அணையின் நீர்மட்டம் உயராமல் இருந்தது . இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் பெய்யும் கனமழையால் , தென்பெண்ணையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு , ஒசூர் கெலவரப்பள்ளி அணை , கிருஷ்ணகிரி அணை ஆகியவை நிரம்பியதால் , உபரி நீர் தென்பெண்ணை வழியாக திறக்கப்பட்டுள்ளது . அதன்படி, சாத்தனூர் அணைக்கு வினாடிக்கு 462 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறதுஅதனால் ., அணையின் நீர்மட்டம் உயரத் தொடங்கியிருக்கிறது. கடந்த 29ம் தேதி அணையின் நீர்மட்டம் 72.55 அடியாக

இருந்தது நீர்வரத்து காரணமாக ., நேற்று அணையின் நீர்மட்டம் 73.85 அடியாக உயர்ந்திருக்கிறது.

கர்நாடக மாநிலத்தில் மேலும் மழை வலுக்கும் சூழ்நிலை உருவானால் , தென்பெண்ணை வழியாக நீர்வரத்து அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது . மேலும், வடகிழக்கு பருவமழை காலத்தில், இந்த ஆண்டு மழைக்கான வாய்ப்பு அதிகம் என வானிலை ஆய்வு மையம் நம்பிக்கை அளித்துள்ளது எனவே ., இந்த மாத இறுதிக்குள் அணையின் நீர்மட்டம் ஓரளவுக்கு நிரம்பும் , வரும் நவம்பர் மாதத்துக்குள் அணை முழுமையாக நிரம்பும் வாய்ப்பு உள்ளது என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.

## கோமாரி நோயை தடுக்க 16 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி : இன்று முதல் போடப்படுகிறது




வேலூர்வேலூர் :, திருவண்ணாமலை மாவட்டங்களில் கோமாரி நோயை தடுக்க 16 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது கோடை மற்றும் குளிர்காலத்தில் . இந்நோய் ஏற்பட்ட மாடுகளுக்கு நாக்கில் . மாடுகளுக்கு கோமாரி நோய் ஏற்படும் கால்நடைகள் கால் குளம்புகளில் புண் ஏற் .கொப்பளங்கள் உண்டாகும்படும் மாடுகள் . கோமாரி நோய் . மாடு சோர்வாக இருக்கும் . பால் குறையும் . தீவனம் சாப்பிடாது இந்நோயை . பாதித்த மாட்டின் பாலை கன்று குட்டி குடித்தால் அவை இறக்க நேரிடும் முற்றிலும் ஒழிக்க தமிழகத்தில் உள்ள32 மாவட்டங்களிலும் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசித்திட்டம் கடந்த 2011 ஜூலை முதல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரை 12 சுற்று தடுப்பூசி போடும் பணி முடிவடைந்துள்ளது .

நடப்பாண்டில் இன்று முதல் 21ம்தேதி வரை 13வது சுற்று தடுப்பூசிப்பணி தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்காக நடைபெற உள்ளது . அதன்படி வேலூர் மாவட்டத்திலும் இன்று முதல் 22 முகாம்களில் 6 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது அதேபோல் . திருவண்ணாமலை மாவட்டத்தில்10 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது இதற்காக தடுப்பு மருந்துகள் ., தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது இங்கிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் தடுப்பூசிப்பணி . மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட நாளில் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி குழுவினர் மூலம் குளிர் சங்கிலி முறையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு செல்லப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் சேலம் மாவட்டம் மேட்டூர் அணையின் நீர்வரத்து :6,809 கனஅடிடியல் இருந்து 7,538 கனஅடியாக அதிகரித்துள்ளது மேட்டூர் அணையின் நீர்மட்டம் .59.12 அடியாகவும், நீர்இருப்பு 24.03 டியாகவும்.சி.எம்., நீர் திறப்பு 1,300 கனஅடியாக உள்ளது.

## தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மழை பெய்யும் : வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை தமிழகத்தில் அடுத்த :5 நாட்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் இயக்குனர் பாலசந்திரன் தெரிவித்துள்ளார் . தமிழகத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது சென்னையிலும் அவ்வப்போது . நேற்று முன்தினம் இரவு . கனமழை பெய்து வருகிறது8 மணியளவில் கனமழை பெய்ததுஇந்தநிலையில் ., நேற்று காலை வெயிலின் தாக்கம் சராசரியைவிட அதிகமாக இருந்தது.வெப்பத்தின் காரணமாக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர் .

மாலை 4.30 மணியளவில் வடபழனி , கோடம்பாக்கம், மயிலாப்பூர், நுங்கம்பாக்கம் உட்பட சென்னையின் பல பகுதிகளில் திடீர் கனமழை பெய்தது அரை மணி நேரம் . இதனால் . நல்ல மழை பெய்தது, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை உள்பட பல்வேறு சாலைகளில் தண்ணீர் தேங்கியது திடீர் மழையால் நேற்று மாலை அண்ணா .சாலை, ஆற்காடு சாலை உட்பட நகரின் பல சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது . இதனால், வாகன ஓட்டிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர் இது குறித்து ., வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் நிருபர்களை சந்தித்து கூறியதாவது மேற்கு : திசைக் காற்று வேக மாறுபாடு மற்றும் வெப்பசலனம் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் , கனமழையும் பெய்துள்ளதுகிழக்கு . திசை காற்று வளிமண்டலத்தின் மேலடுக்கில் வீச வாய்ப்புள்ளதால், அடுத்த ஐந்து நாட்களுக்கு தமிழகத்தில் அநேக இடங்களில் மிதமான மழை பெய்யும் வட தமிழகம் உள் மாவட்டங்களில் . ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஜூன் 1 முதல் ஆகஸ்ட் 31 வரை தென்மேற்கு பருவமழை 25 செமீ பதிவாகியுள்ளது இது இயல்பைவிட .23% அதிகம் ஆகும்சென்னையில் மாலை ., இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும்.